[2002 மார்ச் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சேகரன்.

திரு. கே.என். சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி—தஞ்சை தேசிய நெடுஞ்சாலையில் அடிக்கடி சாலை விபத்துக்கள் நடைபெறுகின்றன. விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.என். சேகரன், இது ஆவுடையார் கோவில் சம்பந்தப்பட்ட கேள்வி.

வினா எண் 37, திரு. சி. சிவசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

37—

ஆரம்ப சுகாதார நிலையம்

***9351—திரு. சி. சிவசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் வட்டம், நெரிப்பரச்சல் ஊராட்சி, பாண்டியன் நகரில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், பாண்டியன் நகர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதற்கண் நமது தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கோவை, பெரியார் மாவட்ட மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான அவினாசி-அத்திக்கடவு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நிதிநிலை அறிக்கையில் ஒப்புதல் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோவை, பெரியார் மாவட்ட மக்களின் சார்பாகவும், அந்தப் பகுதிகளுக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும் இந்த மன்றத்தில் நெஞ்சார்ந்த நன்றியை சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

2002 மார்ச் 28]

எனது கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதில் குறித்து, ஒரு வேண்டுகோள் வைக்கிறேன். கோவை தொழில் நகரமாகத் திகழ்கின்ற காரணத்தால், வருகின்ற காலகட்டத்தில் அந்தப் பகுதியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா எனக் கேட்க விரும்புகிறேன்.

தேசிய நெடுஞ்சாலை அமைந்திருக்கக்கூடிய பெருமாநல்லூரில் இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையத்தை நேற்றைக்கு நிதிநிலை அறிக்கையிலே அறிவித்தபடி, upgrade பண்ணுவதற்கு, உயர்த்துவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிவசாமி அவர்கள் வைத்த வேண்டுகோளின் அடிப்படையில் 30 படுக்கைகள் கொண்டதாக தரம் உயர்த்தக் கருதியுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களின் பட்டியலில், பெருமாநல்லூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையமும் இடம் பெற்றிருக்கிறது. எனவே, இந்த ஆண்டு அந்த ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.ஆர். சுந்தரம்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கு குறைந்தது 30,000 மக்கள் தொகை இருக்க வேண்டுமென்று மத்திய அரசு நிர்ணயித்துள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறி இருக்கிறார்கள். இது சம்பந்தமாக ஒரு கேள்வியை நான் சென்ற சட்டசபைக் கூட்டத் தொடரின்போது கேட்டேன். 30,000 மக்கள் தொகை என்றிருப்பதை, 25,000-ஆக மாற்ற மத்திய அரசிடம் மாநில அரசு வலியுறுத்துமா என்று கேட்டதற்கு ஆவன செய்யப்படும் என்று முன்பு பதில் கூறியிருக்கிறார்கள். ஆகவே, அதை மனதிலே வைத்துக்கொண்டு, தற்போது அனைவருக்கும் சுகாதார வசதி கிடைக்க வேண்டுமென்கிற சூழ்நிலையிலே, 30,000 மக்கள் தொகை இருந்தால்தான் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைக்கலாம் என்ற நிலையை மாற்றி, 25,000 பேர் இருந்தாலும் ஆரம்ப சுகாதார நிலையத்தினை அமைக்கலாம் என்பதற்கான இசைவினை மத்திய அரசிடம் பெறுவதற்கு அரசு ஆவன செய்யுமா? இதுவரை அப்படி ஏதாவது மத்திய அரசிடம் கேட்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல சந்தர்ப்பங்களில் இதே கோரிக்கையை நாம் வைத்திருக்கிறோம். மீண்டும் வலியுறுத்தலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்.

திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டில் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கு அரசின் பரிசீலனையில் உள்ளன என்பதையும், ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட ஹாஸ்பிட்டலாக தரம் உயர்த்துவதைப் போலவே, அதே மாதிரி திட்டத்தினை துணை சுகாதார நிலையங்களை, ஆரம்ப சுகாதார நிலையங்களாக தரம் உயர்த்துவதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதையும் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலேயிருந்து, அந்தந்தப் பகுதிகளுக்கு ஆரம்ப சுகாதார நிலையங்களை புதியதாக ஆரம்பிக்க வேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்ன நிபந்தனைகளுக்குட்பட்டு அந்த இடம் இருக்குமேயானால், அங்கே நிதிநிலையைக் கருத்தில்கொண்டு ஆரம்பிக்கப்படும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, அந்த துணை சுகாதார நிலையங்களை, ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றம் செய்கிறபோது, இதே நிபந்தனைக்கு, இதே இலக்கிற்கு உட்பட்டு அந்தப் பகுதி இருக்குமேயானால், அந்த இடம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 38, திரு. வெ. கோவிந்தராஜ், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

38—

பேருந்து நிலையம்

***2784—திரு. வெ. கோவிந்தராஜ்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—